பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ சிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 20உ (6—11—67) திங்கள் வெளியூர் : ஐப்பசி 21உ (7—11—67) செவ்வாய் [இதழ் : 119

2,328 வாகன்களில் நெல் -- அரிசி!

திருச்சி மாவட்டத்தில் அக். 31-ந் தேதி முடிய பத்து நாட்களில் 2,328 வாகன்களில் நெல்-அரிசி மட்டும்ஏற்றப் பட்டுள்ளனவாம்.

இதுவரையில் எந்தச் சமயத்திலும் இந்த அளவில் அவைகள் ஏற்றப்பட்டதில்லையாம்.

'விளைவை எண்ணிப்பார்க்க அச்சமாக இருக்கிறது'

'வெறுப்புணர்ச்சிக்கு வழிகோலும் நிலைமை உருவாகிறது'

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கமும் அறிவுரையும்

சென்னை, நவ. 6—

"இந்தி பேசாத மாநிலங்களின்மீது இணைப்பு மொழியாக இந்தியைத் திணித்திடச் செய்யப்படும் எந்த முயற்சியையும், 'அதிருப்தியை உருவாக்கி—ஐயப்பாட்டை வளர்த்து—இந்தி மாநிலங்கள் தம்மீது ஆதிபத்திய உரிமை கொண்டாடுகின்றன' என்ற வெறுப்புணர்ச்சியையுமே உருவாக்கும் !

"தம்முள் நெருங்கி வரவேண்டிய மாநிலங்கள் பிரிந்து விலகுவதற்கே இது வாய்ப்புத் தரும். இந்தியாவின் ஒரு பகுதிக்கும்—இன்னொன்றுக்கும் இடையே உள்ள வேறுபாடு வளரவே இது துணை செய்யும். அந்த விளைவுகளை எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது !

"மாறாக, உள்ள நிலையே நீடிக்கும் வகையில் ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்குமானால், மாநிலங்களுக்குள்ளே வேறுபாடு உணர்ச்சி ஏற்படாமல், அனைவரும் சமமாகக் கருதப்படுவதான திருப்தி நிலவும் "

என்று தமிழகக் கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நேற்று பேசுகையில் அறிவுறுத்தினர்கள்.

"நம்முடைய கல்வித் துறையில் ஆங்கிலத்தின் இடம் என்ன ?" என்று ஆராயக் கூடிய, கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்தான் கல்வி அமைச்சர் அவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழக அரசின் கல்விக் கொள்கைபற்றிப் பேசுகையில் அவர் சொன்னதாவது :—

"மாணவர்களின் கல்வியில் ஆங்கிலத்தின் இடம் என்ன?" என்ற பிரச்சினைதான், இந்த அரசு பொறுப்பேற்றதும் முதன் முதல் விவாதித்த அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்று ஆகும்.

தாய்மொழி—ஆங்கிலம்— இன்னொரு மொழி—ஆகிய மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்துவதாக இந்த அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. அண்மையில் டில்லியில் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டபோது, தன் கல்விக் கொள்கையை விளக்கும் வகையில் தமிழக அரசு ஓர் விளக்கக் குறிப்பை அறிவித்தது ; அது இதுதான் :—

1. தாய்மொழிதான் கட்டாய முதல் மொழி ;
2. ஆங்கிலம் கட்டாய இரண்டாம் மொழி ;
3. இந்தியோ வேறெந்த இந்திய மொழியோ மூன்றுவது விருப்ப மொழி.

இதிலிருந்து தமிழுக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதை அறியலாம்.

தமிழை இன்னம் சிறப்பாகப் பயில விரும்புவார் நலன் கருதி, இதில் ஒரு சிறிய மாற்றம் அண்மையில் செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது, மூன்றுவதாக 'இந்தி அல்லது வேறெந்த இந்திய மொழியாவது' என்கிற பகுதியில், சிறப்புத் தமிழை விரும்பிப் படிக்கிறவர்கள் படிக்கலாம் ; அதே நேரத்தில் இந்தியோ வேறெந்த இந்திய மொழியோ விரும்பிப் படிக்கிறவர்களும் படிக்கலாம்.

ஆங்கிலத்தைப் பொறுத்தவரை, மிக இளமைப் பருவத்திலிருந்தே பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்றே திண்ணமாக எண்ணுகிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரை, மூன்ரும் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் சொல்லித் தரப்படுகிறது.

ஏதாவது ஒரு சீரிய உலக மொழியை மாணவர்கள் அறிந்தாக வேண்டுமென்று தமிழக அரசு உறுதியாக நம்புகிறது. அத்தகைய சிறப்பிடம் பெற்றிருக்கிற ஆங்கிலம், ஒரு வரலாற்று விபத்தாக நம்மை முன்னூறு ஆண்டுக்காலம் வெள்ளையர்கள் ஆண்ட காரணத்திற்காக புறக்கணிக்கப்படக்கூடாது. ஆங்கிலத்துக்கு உரிய இடத்தைத் தரவேண்டும் என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

இந்தப் பிரச்சினை இணைப்பு மொழிப் பிரச்சினையோடு நெருங்கிய தொடர்புடையது. இணைப்பு மொழி என்பது, இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் பரவலாகப் பேசப்பட்டுப் புரிந்துகொள்ளத் தக்க மொழியாக இருக்க வேண்டும்.

இன்றைய நிலையில், இணைப்பு மொழிக்கான சிக்கனத்துக்கு ஏற்றதாக இயங்குவது ஆங்கிலம் ஒன்றுதான் ; ஆகவே, ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருந்திட வேண்டுமென்று கருதப்படுகிறது.

பல வட மாநிலங்களில் பள்ளிப் படிப்பிலிருந்து ஆங்கிலம் அகற்றப்படுவது துரதிருஷ்டவசமானது. இது நீடிக்குமானல், ஆங்கிலம் படிக்காத இந்தி மாநில மாணவன் ஒருவன், பிற மாநிலங்களோடு தொடர்புகொள்ள முடியாமல் போய்விடும்."

தமிழ் சிறப்பு குன்றுமா?

'ஆங்கிலப் படிப்பால் தமிழ்ச் சிறப்பு குன்றுமோ' என்று ஐயுறுபவர்க்கு விளக்கம் தரும் வகையில் அமைச்சர் சொன்னதாவது :—

"ஆங்கிலத்தைக் கட்டாய மொழியாக்குவதாலே தமிழுக்கு உள்ள சிறப்பிடம் போய்விடும்—என்று சிலர் படுகிற அச்சம், அடிப்படையற்ற அச்சமாகும்.

உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தாய்மொழியைப் பயிற்று மொழியாக்குவதுதான் இந்த அரசின் உறுதியான திட்டம்.

பள்ளிகளைப் பொறுத்தவரை ஏற்கனவே தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்கிறது.

கல்லூரிகளைப் பொறுத்தவரை முடிந்த அளவு விரைவாக தமிழைப் பயிற்று மொழி ஆக்கும் நோக்கத்தில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. ஆனல் அதை எப்படிச் செய்திடுவது என்பதை நாங்கள் முடிவு செய்யமுடியாது. கல்வித் துறை அறிவாளரும் பல்கலைக் கழகங்களுமே அதை முடிவு செய்தாக வேண்டும்.

ஐந்து ஆண்டுகளுக்குள் பிராந்திய மொழியைக் கல்லூரிகளின் பயிற்று மொழியாக்கும் கொள்கையை இந்த அரசு ஒப்புக்கொள்ளவில்லை, ஏனெனில், அந்த இலக்கை அடைந்திட பூர்வாங்க வேலைகள் நிரம்பச் செய்தாக வேண்டி இருக்கிறது.

என்றாலும், அறிவியல், பொறியியல் நுணுக்க நூல்கள் உட்படப் பல நூல்களைத் தமிழில் பெயர்த்திட ஏற்கனவே வேலை தொடங்கிவிட்டார்கள்.

ஆராய்ச்சிக்கான பட்ட மேல் நிலைப் படிப்புக்கும் பயிற்று மொழி பற்றி முடிவு செய்யும் பொறுப்பும் கல்வித் துறை நிபுணர்களையே சாரும்.

உலகின் பல நாடுகளில் அறிவியல் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது ; அந்த வேகத்துக்கு ஈடுகொடுக்க வேண்டுமானல், ஆங்கிலம் போன்ற உலக மொழியில் நுட்பமான அறிவு பெற்றிருந்தால்தான் முடியும்."

காமராசரின் எதிர்கால நிலைமை?

இந்திராவை வரவேற்க புதுடில்லிக்குப் புறப்படுவதேன் ?

புதுடில்லி, நவ. 6—

மாஸ்கோ சென்றுவிட்டு, டில்லி திரும்பும் தலைமையமைச்சர் இந்திராவை வரவேற்கக் காங்கிரசுத் தலைவர் காமராசர், நவ. 8-ந் தேதி சென்னையிலிருந்து புதுடில்லிக்கு வருகிறர் !

"காங்கிரசுத் தலைமைப் பதவியில் நீடிக்க விரும்பவில்லை யென்று அறிவிப்பதா ? அல்லது இன்னொரு முறை தம்மைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமெனக் கோருவதா ?" என்று, காமராசர் இன்னும் முடிவு செய்யவில்லை.

போட்டியின்றி இம்முறை மீண்டும் காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார் என்பதை, காமராசர் நன்கு அறிவார் !

தென் சென்னை இடைத் தேர்தல்

கடல்கடந்த நாட்டிலுள்ளவர்களும் கண்ணேட்டம் செலுத்துகின்றனர்

வாக்குகள் எண்ணிக்கைபற்றி மாநகராட்சி ஆணையர் ---இரு இடங்களில் எண்ணப்படுமென அறிவிப்பு

★

சென்னை, நவ. 6—

நாளை நடைபெறவிருக்கும் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியின் இடைத் தேர்தல் முடிவின்மீது, இந்தியாவில் மட்டுமன்றி, கடல்கடந்த நாடுகளிலுள்ளவர்களும் கண்ணேட்டம் செலுத்துகின்றனர்.

கடந்த ஒரு வார காலமாகக் கழக வேட்பாளர் முரசொலி மாறனை ஆதரித்துத் தீவிரமாக நடைபெற்றுவந்த தேர்தல் பிரசாரம், நேற்று மாலை 5-மணியுடன் முடிவடைந்தது.

அறிஞர் அண்ணு உள்ளிட்ட அமைச்சர்கள் – நாடாளுமன்ற உறுப்பினர்கள் – சட்டமன்ற, மேலவை உறுப்பினர்கள் – மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள் – மாவட்ட, வட்ட, பகுதி தி. மு. க. செயலாளர்கள் – நிர்வாகிகள் – தோழர்கள் – துணை மன்றங்களின் நிர்வாகிகள்—கலைஞர்கள் – ஆதரவாளர்கள் அனைவரும் தென் சென்னைத் தொகுதியின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும் பங்கேற்றதுடன், வீதிகள் தோறும் சென்று கழக வேட்பாளர் வெற்றிபெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர் ; கழகத் தோழர்கள் இல்லங்கள் தோறும் சென்று கழக வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கோரினர்.

எஸ். என். மாறன் (தி.மு.க.)
சி. ஆர். இராமசாமி (காங்கிரசு)
சி.எம். சீனிவாசன் (சுயேச்சை)
கே. வி. வைத்தியநாதன் ,,
ஜி. இராசரத்தின நாயகர் ,,
டி.எஸ். அப்துல் காதர் ,,
டி. டி. அங்கண்ண செட்டியார் ,,

ஆகியோர் இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தென் சென்னைத் தொகுதியில் தற்போது 5,83,721 வாக்காளர்கள் இருக்கின்றனர்.

எழும்பூர், ஆயிரம்விளக்கு, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராயநகர், சைதாப்பேட்டை ஆகிய 6-சட்டமன்றத் தொகுதிகள், தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கியிருக்கின்றன.

"நவ. 8-ந் தேதி காலை 8-மணிக்கு பதிவான வாக்குகளை எண்ணத் துவங்குவர்"

என்று மாநகராட்சி ஆணையர் அம்பாசங்கர், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"துரிதமாக வாக்குகளை எண்ணும் பொருட்டு இரு இடங்களில்—அதாவது, நேரு ஸ்டேடியத்திலும், பச்சையப்பன் கல்லூரியிலும் வாக்குகள் எண்ணப்படும் ; அன்று மாலை முடிவு அறிவிக்கப்படும்.

பசிப் பிணி ஒழிப்புப் போரில் தவறினல் ....

பஞ்சம் பரவலாகும்---

பயங்கர விளைவுகள் உருவாகும்

துயரத்தை மக்கள் பொறுத்துக்கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது !

"பசிப் பிணி, மனிதனின் மவுனத்திற்கு எதிராக இருந்துவந்தது அந்தக் காலம்! பட்டினி, மவுனமாகச் சாகும் வழியாக இருந்தது அந்தக் காலம்! இந்தக் காலத்தில் இவ்விரண்டும் வன்செயலின் பெரும் கூச்சலாக மாறிவிட்டுள்ளன!

"கோடிக்கணக்கான மக்களின் விதி—நாடுகளின் கதி—பசிப் பிணி ஒழிப்புப் போரின் முடிவைப் பொறுத்திருக்கிறது! இந்தப் போரில் வெற்றி பெற்றே ஆக வேண்டும்!

★

இன்றைய உலகில் பல நாடுகளுக்கு இருக்கும் தலையாய பிரச்சினை பசிப் பிணி! இப்பிரச்சினையின் கொடுமை இன்னும் முழுவதும்—நன்ருக உணரப்பட்வில்லை!

ஆராயப் புகின், இப்பிரச்சினையின் கொடுமை எத்தகையது என்று தெரியவரும்! புலப்படும் உண்மைகள் கிலியூட்டும்!

ஏற்கனவே உலக மக்களில் பாதிப் பேருக்கு உணவில்லை! பட்டினியால் வாடுகின்றனர்! உணவு உள்ளவருக்கும் போதிய ஊட்டமில்லை!

ஊட்டக் குறைவினல் ஏற்படும் நோய்களினல் நாள்தோறும் 10,000 பேர் மடிகின்றனர்!

வளர்ச்சிக் குறைவான நாடுகளில் காணப்படும் நிலை இது! பெரும்பாலும் குழந்தைகள்தான் மடிகின்றனர்!

ஆசியாவிலே ஜப்பான் தவிர—மத்தியக் கிழக்கிலே இஸ்ரேல் நீங்கலாக—ஆப்பிரிக்காவிலே தென் பகுதிகள் தவிர—மத்திய அமெரிக்கா, கரீபியன், தென் அமெரிக்காவின் வட பகுதிகள்—இவையனைத்திலும், மக்கள் உண்ணும் உணவிலே ஊட்டம் இல்லை!

ஆனல், இந்த நாடுகளிலே மக்கள் தொகையோ கட்டுக்கடங்காமல் மிக வேகமாகப் பெருகிக்கொண்டு வருகிறது!

இதன் விளைவு என்ன?—பட்டினிக் கொடுமை! இன்னும் அதிகம் பேர் பட்டினி கிடக்க நேரிடும் அவல நிலை, அதிக தொலைவில் இல்லை!

சுருக்கமாகச் சொல்வதானல், உணவு உற்பத்தி வேகத்தை மிஞ்சிவிட்டிருக்கிறது—மக்கள் தொகைப் பெருக்கத்தின் வேகம்!

வளரும் நாடுகளிலே உணவு உற்பத்திப் பெருக்கு 1960-ம் ஆண்டு முதல் குறைந்துவருகிறது; ஆனல் மக்கள் தொகையோ ஆண்டுக்கு இரண்டரை சதவிகிதம் முதல் மூன்று சதவிகிதம்வரை பெருகி வந்திருக்கிறது!

1966-ல் உலக மக்கள் தொகையோடு ஏழு கோடி கூட்டப்பெற்றது; ஆனல், உணவு உற்பத்தியில் உயர்வு இல்லை!

மக்கள் தொகைப் பெருக்கம் மட்டுமே உணவுப் பற்ருக்குறைக்குக் காரணமல்ல. வளரும் நாடுகளின் பொருளாதார நிலைமை வளர்ச்சியுறுகையில், வருமானம் பெருகி வாங்கும் ஆற்றலை அதிகரித்துள்ளது. இந்த அதிக ஆற்றல் உடனேயே பயன்படுத்தப்படுகிறது--நல்ல உணவும், அதிக உணவும் வாங்க! பால், முட்டை, கோழி வகைகள் அதிகமாக வாங்கப்படுவதால், இந்த அதிகத் தேவை வேளாண்மையைத்தான் பாதிக்கிறது; ஏனெனில், வேளாண்மைதானே கால்நடைகளுக்கும், கோழி வகைகளுக்கும் வேண்டிய தீவனங்களை உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது?

வளரும் நாடுகள், அதிகரித்துவரும் உணவுத் தேவையை நிறைவு செய்யத் தவறும் பட்சத்தில், மக்களிடையே அரசியல் கொந்தளிப்பும், சமுதாய அமைதியின்மையும் ஏற்படும்; ஏனெனில், துயரத்தை மக்கள் மவுனமாகப் பொறுத்துக்கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது! பொருளாதார—சமுதாய வளர்ச்சி திணறுவதோடு, ஊட்டக் குறைவும் ஏற்படும்! இறுதியில், பஞ்சமும் பரவலாகத் தலைவிரித்தாடும்! இந்தத் தோல்வி, உலகுக்குப் பயங்கர விளைவைத் தோற்றுவிக்கும்!

எனவே, அமைதிப் பிரச்சினைக்கு அடுத்தபடி மாபெரும் அறைகூவலாக இருக்கும் பிரச்சினை—உணவுப் பிரச்சினையே ஆகும். மக்கள் தொகைப் பெருக்கத்தோடு போட்டியிட வேண்டியிருக்கிறது—உணவு உற்பத்திப் பெருக்குப் பிரச்சினை! ஆனல், போட்டியிலே தோல்விதான் கண்டுவருகிறது!

உலகுக்குத் தோன்றியுள்ள இந்தக் கடும் பணிக்கு இரண்டு அம்சங்கள் உண்டு; பண்ணை உற்பத்தியைப் பெருக்குவது ஒன்று; மக்கள் தொகைப் பெருக்க விகிதத்தைக் குறைப்பது மற்றது.

33 ஆண்டுகளுக்குப் பிறகு—2,000-ம் ஆண்டுவாக்கில்—உலக மக்கள் தொகை 700 கோடியாகிவிடும்! இன்று இருக்கும் தொகையைவிட இரண்டு மடங்கு! இப்பிரச்சினையைத் தீர்க்க எளிய வழி ஒன்று இல்லை என்பதை நாம் அறிவோம்.

"என்னவானலும் சரி—இந்த நவீனமாக்கும் பணியை விரைவில் செய்து முடிக்க வேண்டும்" என்பதுதான் இப்போதுள்ள அறைகூவல்!

புதிய தொழில் நுட்ப முறைகளைக் கையாளவேண்டும்; புது வகை விதைகளைப் பயன்படுத்த வேண்டும்; புது இனக் கால்நடைகளை விருத்தி செய்யவேண்டும்; இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் முதலியவற்றை தகுந்த முறையில் நிறைய பயன்படுத்த வேண்டும். செம்மையான மார்க்கெட் வசதிகள், போக்குவரத்து வசதிகள் இன்றியமையாதவை.

பொருளாதார வளர்ச்சியிலே வெற்றி கண்டுள்ள நாடுகளுக்கிடையே பொதுவான அம்சம் ஒன்றுள்ளது. பெரும் வெற்றி

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

வடவர்களுக்கு கருநாடக அமைச்சர் அறிவுரை!

"தேசிய ஒற்றுமையை முன்னிட்டு, 'தென்னிந்தியர்களின் மீது இந்தியைத் திணிக்க வேண்டாம்' என்று வட இந்தியத் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"தென்னிந்தியர்களை இந்தி கற்குமாறு கூறுவதற்கு முன்னல், வடக்கில் உள்ளவர்கள் தென்னிந்திய மொழிகளில் சிலவற்றைப் படிக்கட்டும்!

"இன்றுள்ள நிலைமையில் இந்தியைப் புகுத்துவது, தென்னிந்தியர்களின் சௌகரியங்களைப் பெரிதும் பாதிக்கும். இதனல், தேசியப் பணிகளில் அவர்களால் முழு மூச்சுடன் ஈடுபட முடியாமல் போய்விடும்.

"இந்திப் பிரச்சினையை அவர்கள், தென்னிந்தியர்களின் முடிவிற்கே விட்டுவிட வேண்டும்"

என்று மைசூர் மாநில உணவு அமைச்சர் ஜட்டி கூறியிருக்கிருர்.

காங்கிரசிலிருந்து மேலும் 3,000 பேர் விலகிவிட்டனர்!

கருநாடக மாநிலத்திலுள்ள குல்பர்கா மாவட்டத்தில், சின்னுட்களுக்கு முன்பு 2,000 காங்கிரசுக்காரர்கள் பதவி விலகியதைத் தொடர்ந்து, இப்பொழுது இதே மாவட்டத்திலுள்ள 'ஆனந்த்' என்ற இடத்தில் 3,000 காங்கிரசுக்காரர்கள் கட்சியை விட்டு வெளியேறியிருக்கிருர்கள்.

இதனல், இங்குள்ள நகராட்சி காங்கிரசின் கையை விட்டு அகன்றுவிடும் என்று தெரிகிறது.

உணர்வு குன்றினல் ஒற்றுமை குலையும்

வலிவு மிக்க நாடாக இந்தியா உருவாவது அவசியம்

முதலமைச்சர் அண்ணு தெளிவுரை

சென்னை, நவ. 4—

"மாநிலத்திற்கு மாநிலம் மொழியிலும், பழக்கவழக்கங்களிலும் வேறுபாடு இருக்கலாம்; ஆனல் அந்த வேற்றுமையிலும் ஒற்றுமையைக் காண வேண்டும்; அப்போதுதான் நாட்டின் ஒவ்வொரு பகுதியும் வலிவு மிக்கதாக விளங்கும்; நாட்டின் ஒவ்வொரு பகுதியும் வலிவுமிக்கதாக இருந்தால்தான், இந்தியாவின் ஒற்றுமை ஓங்கிச் செழிக்கும்; இந்திய நாடு வலிவு மிக்க நாடாக அமையும்; இந்தியாவின் ஒரு பகுதி பலவீனமுற்ருலும், அது நாட்டையே பலவீனமடையச் செய்யும்.

"நாட்டில் உள்ள ஒவ்வொருவரும், 'எல்லோருக்காகவும் நாம்; நமக்காக எல்லோரும்' என்ற உணர்வு பெற்று வாழ வேண்டும்"

என்று, முதலமைச்சர் அண்ணு அவர்கள் ஜார்ஜ் டவுன் எம்.யு.சி. மைதானத்தில் குசராத் மண்டல் சார்பில் நடைபெற்ற விழாவில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர்.

சூழ்நிலை குன்றினல்.... நிலைமையை உணர்த்துவீர்!

சிவசேனையின் நடவடிக்கைகள் குறித்து, அனைத்திந்தியாவிலும் உள்ள மக்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி முதலமைச்சர் கேட்டுக்கொண்டதாவது :—

"சிவசேனையைக் கண்டித்து ஒவ்வொரு மாநிலமும் தீர்மானங்களைப் போட்டு மகாராட்டிர அரசுக்கு அனுப்பவேண்டும்.

இந்தியாவின் மற்ற மாநிலங்களில் வசிக்கும் வேறு மாநிலத்தவர்கள், ;அந்தந்த மாநில மக்களுடன் சுமுகமான முறையில் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்க, 'சிவசேனை'யின் நடவடிக்கைகளினல் மகாராட்டிர மாநிலத்தில் மாத்திரம் அந்தச் சுமுக சூழ்நிலை குன்றி இருப்பதை மகாராட்டிர அரசுக்கு இதன்மூலம் உணர்த்த வேண்டும்."

சிவசேனையின் நடவடிக்கைகளைக் கண்டிக்கையில், முதலமைச்சர் குறிப்பிட்டதாவது :—

"மகாராட்டிர மக்கள் அன்பானவர்கள் — மதிப்புக்குரியவர்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும்; ஆனல், மகாராட்டிர மாநிலத்தில் உள்ள தவருன பாதை காட்டப்பட்டவர்கள்—எழுத்தறிவில்லாதவர்கள் —குண்டர்கள் ஆகியோர் சேர்ந்ததுதான் 'சிவசேனை' ஆகும்!"

காங்கிரசு அமைச்சர்கள்மீது

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

முன்னுள் அமைச்சர்கள்மீது சுமத்தப்பட்ட இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்த ஒரிசா கூட்டு அமைச்சரவை, விசாரணைக் குழு ஒன்றை அமைத்திருக்கிறது; இவ்விசாரணைக் குழு 1961-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டுவரை பதவியில் இருந்த அமைச்சர்கள் மீதான புகார்கள் பற்றி விசாரிக்கும்.

"1947-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரையில் பதவி வகித்த அமைச்சர்கள் மீதுள்ள புகார்கள் பற்றியும் இக்குழு விசாரிக்க வேண்டும்" என்று ஒரிசா சட்டமன்ற கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கோண்டாதர் பைகரியா கோரியிருக்கிருர்; 15 முன்னுள் காங்கிரசு அமைச்சர்கள் மீதான புகார்களை விசாரிப்பது, அரசியல் நிர்வாகச் சீர்திருத்தத்திற்கு உதவியாக இருக்கும்' என்று அவர் சொன்னுர்.

"1947-ம் ஆண்டிலிருந்து பதவியில் இருந்த அமைச்சர்கள் மீதுள்ள புகார்கள் பற்றியும் விசாரணை நடத்த வேண்டும்" என்று பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியும் கோரியுள்ளது.

திரு. கன்னு தலைமையில் உள்ள விசாரணைக் குழு, தமது புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு விட்டது. முன்னுள் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் மீதுள்ள புகார்கள் குறித்து அலுவலக எழுத்துச் சான்றுகளை கவனித்து வருகிறது. முன்னுள் அமைச்சர்களுக்கு நோட்டீசு வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புவனேசுவரில், நவ. 8-ந்தேதியன்று விசாரணைக் குழுவின் முன்பு ஆஜராக வேண்டும் என்று நோட்டீசு அனுப்பப்படுகிறது.

இந்திய அரசின் மந்தப் போக்கு!

உதவி தரும் நாடுகள் தயங்குகின்றன!

பெற்ற உதவியைப் பயன்படுத்தாததன் விளைவு!

புதுடில்லி, நவ. 6—

இந்தியாவுக்குப் பொருளாதார உதவி அளிப்பது பற்றி விவாதிக்க உலக பாங்கியின் ஆதரவிலான இந்திய உதவிச் சங்கக் கூட்டம் பாரிசில் நடைபெறவிருக்கிற இச்சமயத்தில், உதவி அளிக்கும் முக்கிய நாடுகளிடையே கடும் கருத்துப் பிளவு ஏற்பட்டிருக்கிறது.

உதவிச் சங்கக் கூட்டம் நவம்பர் 14-ந் தேதி ஆரம்பமாகிறது; 'அடுத்த ஆண்டுக்கு திட்ட வேலைப் பிணைப்பற்ற உதவியாக இந்தியாவுக்கு 90 கோடி டாலர் தேவையில்லை' என்று ஜப்பான், மேற்கு ஜெர்மனி மற்றும் சில நாடுகள் கூறுகின்றன.

"இந்தியாவில் பொருளாதார மந்தம் காரணமாக எல்லாத் தொழில்களும் முழு அளவில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதால், இந்தியா சுமார் 60 கோடி டாலர் உதவியுடன் திருப்தியடைய வேண்டும்" என்று அவர்கள் கூறுகின்றனர்.

தவிர, 'இந்தியா இன்னும் பயன்படுத்தாமல் ஏராளமான உதவி பாக்கி நிற்கிறது' என்றும் விவாதிக்கப்படுகிறது; 'இந்தியா மேற்கொண்டு புதிதாக உதவி கேட்பதற்கு முன்னர், அப்பாக்கி நிதியை முதலில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' என்பது அந்நாடுகளுடைய கருத்தாகும்.

எனினும், பிரிட்டிஷ் அதிகாரிகள் காட்டும் போக்கு உற்சாகமூட்டுவதாக உள்ளது; 'கடந்த காலத்தில் இந்தியா ஓரளவு உதவியைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற காரணத்தால், அதற்குத் தேவைப்படுகிற உதவியை இப்போது அளிக்காமலிருப்பது சரியல்ல' என்று அவர்கள் கருதுகின்றனர்.

வழக்கமாக ஓராண்டுக்கு 3 கோடி பவுன் வீதம் உதவி அளித்துவரும் பிரிட்டன், பாரிஸ் கூட்டத்திலும் அந்த அளவுக்கு உதவித் தொகையை அறிவிக்கும் என்று தெரிகிறது.

உதவிச் சங்க உறுப்பினர்களிடம் இந்தியாவின் தரப்பை எடுத்து விவாதிப்பதற்காக, விரைவில் அதிகாரிகள் குழு ஒன்று பாரிஸ் நகருக்குச் செல்லும்.

"நடப்பு ஆண்டின் அமோக விளைச்சல் வர ஆரம்பித்து, தொழில்துறையினர் அரசாங்கத்திடமிருந்து நிறைய ஆர்டர்களைப் பெறும்போது பொருளாதார நடவடிக்கைகள் பழையபடி வேகம் பிடிக்கும்" என்று இந்திய அரசாங்கம் கருதுகிறது.

தனியார் துறைத் தொழிற்சாலைகள் சிறப்பான வகையில் உற்பத்தியை முடுக்கிவிடும் வகையில்—தனியார்துறை நிறுவனங்களிடம் ஏற்கனவே ரூ. 85 கோடி பெறுமான சாதனங்களுக்கு அரசாங்கம் ஆர்டர் அளித்துள்ளது. தொழில் வட்டாரங்களில் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், ஏற்றுமதியை அதிகரிப்பது கடினமல்ல என்று அரசாங்கம் கருதுகிறது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றும் இந்தியா கருதுகிறது.

தூதரகத்தின் வழியாக வாஷிங்டனிலும் இது குறித்துப் பேச்சு நடக்கிறது; இருப்பினும் இதுவரை வெற்றி ஏற்படவில்லை.

‘ஆங்கிலம் நீடிக்க அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும்’

‘நேரு உறுதிமொழியைச் சட்டமாக்கத் தாமதம் கூடாது’

ஆந்திர முதல்வர் பிரும்மானந்த ரெட்டியும் வற்புறுத்துகிறார்

“இணை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடிக்க அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்”

என்று ஆந்திர முதலமைச்சர் கே. பிரும்மானந்த ரெட்டி வலியுறுத்தினார். அவர் இதுபற்றி மேலும் விளக்கியதாவது:—

“மொழிக் கொள்கை சம்பந்தமாகப் பண்டித நேரு அளித்த உறுதிமொழி தென்னக மக்களின் மனநிறைவுக்கு ஏற்ப நிறைவேற்றப்பட வேண்டும் இது தொடர்பாக மத்திய அரசு சிறிதும் தாமதம் செய்யாமல் அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும்; இந்தி மொழி பேசாத பகுதி மக்களின் மனத்தில் தோன்றியுள்ள அச்சத்தைப் போக்கவேண்டும்.

“பல்கலைக் கழகங்களின் பாட மொழி தொடர்பாக ஆந்திர மாநில அரசு உறுதியான கொள்கையைக் கடைபிடித்து வருகிறது. வட்டார மொழியை பாட மொழியாக்குவதில் ஆந்திர அரசு அவசரப்படவில்லை. பல்கலைக் கழகங்களில் இப்போதைக்கு தெலுங்கு பாட மொழியாகாது.”

ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன!

ஆந்திரக் காங்கிரசு அரசுக்கும்—தமிழக தி. மு. கழக அரசுக்கும் இடையே நிலவுகிற உறவு பற்றிக் கேட்டபோது, அவர் சொன்னதாவது:—

“கடந்த ஏழு மாதங்களாகத் தமிழகத் திராவிட முன்னேற்றக் கழக அரசுடன் கொண்டிருக்கும் தொடர்பு, மிகவும் சுமுகமாக இருக்கிறது. எங்களுக்கிடையே எவ்வித சச்சரவும் இல்லை. தமிழகம் போன்ற அண்டை மாநிலத்துடன் சச்சரவு சொள்ள முடியாது; ஏனெனில், இரு மாநிலங்களின் நலன்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன.”

செஞ்சீனாவின் அணுகுண்டு தாக்குதல்

பாதுகாப்புத் தரும் உறுதி அளிக்கப்படுமா?

மாஸ்கோவை எதிர்பார்க்கும் இந்தியாவின் நிலை என்ன?

புதுடில்லி, நவ. 6—

அணு ஆயுதப் பரவல் உடன்படிக்கை நகலை மீண்டும் எதிர்நோக்கிச் செஞ்சீனாவிலிருந்து திடீரென்று வரக்கூடிய அணுகுண்டுத் தாக்குதலுக்குப் பாதுகாப்புத் தரும் உத்தரவாதங்களை அளிக்க வேண்டுமென்று தலைமையமைச்சர் இந்திரா, சோவியத் தலைவர்களிடம் வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வுடன்படிக்கை குறித்து இந்தியா கொண்டுள்ள கருத்து மாஸ்கோவிடம் பன்முறை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறதாம்.

“உத்தரவாதங்கள் அளிக்கப்படாவிடில், அணு ஆயுதப் பரவலைத் தடைசெய்யும் உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திடாது” என்று இரஷ்யாவிடம் கூறுவதுதான் இதன் நோக்கமாகும்.

இரஷ்யா அவ்வுடன்படிக்கை பற்றிக் கொண்டுள்ள நிலை எளிதாகும்; ‘ஐ. நா. அவையின் மூலம் தான் அதுபோன்ற உத்தரவாதத்தைத் தரமுடியும்’ என்று தூதரக வழிகளின் மூலம் மாஸ்கோ சொல்லிவிட்டது.

பீகிங் இந்தியாவைத் தாக்குமாயின், இரஷ்யா பாதுகாப்பு மன்றத்தின் மூலம் இந்தியாவின் உதவிக்கு வரும். இதுபோன்ற ஏற்பாட்டினால் மிகவும் தாமதம் ஏற்படும் என்றும், சீன ஆபத்தை எதிர்ப்பட்டுள்ள நாடுகளின் தேவைக்கேற்ப அது அமைய

(2-ம் பககம் பார்க்க)

பவானி தொகுதி

விவசாயிகள் கவனிக்க:

வேளாண்மைக்கு மின்விசை தேவைப்படுவோர் மாநாடு, 26—11—67-ல், கோபிசெட்டிப்பாளையத்தில் நடைபெறவிருக்கிறது.

மாநாட்டில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மின்கழக மதிப்பீட்டுக குழுத் தலைவர் எஸ். இராமச்சந்திரன் பி.ஈ., எம்.எல்.ஏ., மின் கழக நிர்வாகக் குழுத் தலைவர் திரு. வி. பி. அப்பாதுரை ஆகியோரும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

வேளாண்மைக்கு மின்விசை கேட்டு விண்ணப்பம் செய்தும் ஒப்பந்தம் செய்தும் இதுவரை மின்விசை தொடர்பாகக் குறைபாடு உள்ளவர்களும், 20-11-67-க்குள் பவானியில் உள்ள திரு. ஏ. எம். இராசா எம்.எல்.ஏ., அவர்கள் அலுவலகத்திற்கு எழுத்துமூலம் விவரம் தெரிவிக்க வேண்டப்படுகிறார்கள்.

சென்னை 92வது வட்ட முத்தமிழ் மன்றம்

சென்னை 92-வது வட்ட முத்தமிழ் மன்ற நிர்வாகிகள் தேர்தல் 30—10—67-ல் நடைபெற்றது; ஜி. தனசேகரன் அவைத் தலைவராகவும், மு. விசுவநாதன் செயலாளராகவும், ஜி. வாசுதேவன் பொருளாளராகவும், டி. கே. கோபால் துணைச் செயலாளராகவும், கே. பெருமாள், ஆர். எம். நாகலிங்கம், ஜே. பி. செல்வம், கே. கோவிந்தராசன், ஜி. வாசுதேவன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரியானாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி?

இடைத் தேர்தல் நடத்தவும் ஏற்பாடு

புதுடில்லி, நவ. 5—

அரியானா மாநிலத்தில் இடைத் தேர்தல் நடத்துவதற்கு முன்பு, குடியரசுத் தலைவர் ஆட்சி பிறப்பிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவாம்.

சட்டமன்றத்தைக் கலைத்து விடும்படி ஆலோசனை கூறிவிட்டு, ‘காபந்து’ அரசின் முதலமைச்சராக நீடிக்கத் தற்போதைய முதலமைச்சர் பிரேந்திர சிங்கிற்கு வாய்ப்பு கிடைக்காமல் தடுக்கக் காங்கிரசு முயற்சி செய்யுமெனக் கூறப்படுகிறது.

அரியானா போன்ற மாநிலங்களில், இடைத் தேர்சல்கள் நடப்பதை காங்கிரசு மேலிடம் ஆதரிக்கிறதாம்!

சென்னை 97-வது வட்ட கழகத் தோழர்களின் தேர்தல் பணி

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி--- வி. எஸ். கோவிந்தராசன் பங்கேற்றனர்

சென்னை, நவ. 4—

தென் சென்னைத் தொகுதி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கழக வேட்பாளருக்கு ஆதரவு கோரி சைதைத் தொகுதியில் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. எஸ் கோவிந்தராசன் ஆகியோருடன் சைதை சம்பந்தம், 97-வது வட்ட தி. மு. க. செயலாளர் ஒய். எம். சேகர், துணைச்செயலாளர் ஏழுமலை, பொருளாளர் தட்சணாமூர்த்தி, தோழர்கள் வேலு, கங்காதரன், பொன்னுவேலு, தென்னரசு, கண்ணன், ஆ. மணி ஆகியோர் இல்லங்கள்தோறும்சென்று கழக வேட்பாளருக்கு ஆதரவு தருமாறு கோரினர்.

ஊர்வலமாகச் சென்ற அமைச்சர் ஏ. கோவிந்தசாமிக்கும், வி. எஸ். கோவிந்தராசனுக்கும் ஆங்காங்கே மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அடைந்துள்ள நாடுகள் வேளாண்மையை அசட்டை செய்யவில்லை. வேளாண்மை வளர்ச்சிகே முதலிடம் கொடுத்துள்ளன.

சில நாடுகள், உணவு உற்பத்திக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ளாமல், இரவோடு இரவாகத் தொழில் வளர்ச்சி காண முயன்றன; வேளாண்மையில் அவை கவனம் செலுத்தவே இல்லை. மக்களில் பெரும்பான்மையோரான விவசாயிகளை அவர்கள் அசட்டை செய்தனர். அதன் பலனை இப்போது பஞ்சத்தின் உருவிலும், பொருளாதார வளர்ச்சிக்குச் செய்த முதலீடுகள் அனைத்தின் சீர்குலைவின் உருவிலும் அனுபவிக்கின்றனர்.

‘உணவு உற்பத்தியாளர்களை எந்த நாடும் அசட்டை செய்ய இயலாது’ என்று உலகம் இப்பொழுது உணர்ந்துவிட்டது! அமெரிக்காகூட முன்காலத்தில் இந்தப் படிப்பினையை அவதிப்பட்ட பின்னர்தான் உணர்ந்தது!

பசிப் பிணி, பஞ்சம் ஆகியவற்றின் கோர விளைவுகளைத் தடுக்க வேண்டுமானால், வளர்ச்சி பெற்ற நாடுகளும் சரி—வளரும் நாடுகளும் சரி—கீழ்க்கண்ட மூன்று வழிகளைப் பின்பற்றியாக வேண்டும்:—

1. வளரும் நாடுகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு நிலையை அடையும்வரையில் அந்நாடுகளுக்கு உணவு உதவ, வளர்ச்சி பெற்ற நாடுகள் தம் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உணவு உற்பத்திச் செய்தாக வேண்டும்.

2. அதே சமயத்தில், வளர்ச்சி பெற்ற நாடுகள் உணவு உற்பத்தித் தொழில் நுட்பத்தின் பயன்படுத்தக்கூடிய பகுதியை வளரும் நாடுகளுக்குத் தெரிவிக்க, இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும். அத்துடன் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டிருக்கும் நாடுகளுக்கு, தேவையான உதவியையும் அளிக்க வேண்டும்.

3. தேவையாக இருக்கும் காலம்வரை வளரும் நாடுகளும் தியாகம் செய்ய வேண்டும்; பயிற்சிக்கு வழி செய்யவேண்டும்; சட்டம் இயற்ற வேண்டும்; தத்தம் வேளாண்மையை நன்குகப் புரிந்துகொள்வதற்கும், தத்தம் மக்களுக்குப் பணி செய்வதற்கும் இவையனைத்தும் அவசியம்.

அமெரிக்கா போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகள் எவ்வளவுதான் உதவி தந்தாலும், வளரும் நாடுகள்தான் தம்மை மீட்டுக்கொள்ளவேண்டும்.

திருச்செங்கோடு-- சங்ககிரி விவசாயிகள் கவனத்திற்கு:

19—11—67-ல், திருச்செங்கோடு, சங்ககிரி தாலுக்கா விவசாயிகள் மாநாடு குமாரபாளையத்தில் நடைபெறவிருக்கிறது; மாநாட்டிற்கு திரு. கே. எஸ். சுப்பிரமணிய (கவுண்டர்) தலைமை தாங்குவார்; திரு. எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் மாநாட்டைத் திறந்துவைப்பார்; மாண்புமிகு விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். கிருஷ்ணசாமி (கவுண்டர்), கே. ஆர். நல்லசிவம், டி. ஏ. இராசவேலு, ஏ. ஆறுமுகம், மு. சின்னுசாமி, மற்றும் காஞ்சி கல்யாணசுந்தரம், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் பங்குகொள்ள இருக்கிறார்கள்.

மாநாட்டில் விவசாயிகளின் குறைபாடுகளை எடுத்துச் சொல்லவும், அரசாங்கத்திடம் பெறக்கூடிய நன்மைகளைப் பெறவும் ஆவனசெய்ய இருப்பதால் விவசாயிகள் தங்களுடைய குறைபாடுகளையும், தேவைகளையும் கீழ்க்காணும் முகவரிக்கு 10—11—67-க்குள் அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோரிக்கை அனுப்பும் முகவரி:- வி. கே. செல்லப்ப (கவுண்டர்), திருச்செங்கோடு — சங்ககிரி தாலுக்கா விவசாயிகள் சங்கம், புதுப்பள்ளிபாளையம் ரோடு, பி குமாரபாளையம் (சேலம் மாவட்டம்).

ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. விழா

18—11—67-ல் விடுதலை வீரர் வ. உ. சிதம்பரனார் நினைவு நாள் வருவதையொட்டி, வ.உ.சி. பிறந்த ஒட்டப்பிடாரத்தில், அவர் நினைவாக இலக்கிய விழாவொன்று மிகச் சிறந்த முறையில் நடந்த ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. அதையொட்டி சிறப்புச் சொற்பொழிவுகள் — கவியரங்கம் — பட்டிமன்றம்—கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

“விழாவிற்கு குன்றக்குடி அடிகளார், பேராசிரியர் அ. சீனிவாசராகவன், பேராசிரியர் க. அன்பழகன், டாக்டர் சி. இலக்குவனார், பீர் முகமது எம்.எல்.ஏ., கா. மு. கதிரவன், மா. பா. குருசாமி, சி. பா. ஆதித்தனார், க. திருமாறன், ஏ. பி. சி. வீரபாகு, பா. வளன் அரசு முதலியவர்களையும், மற்றும் தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்கள் பலரையும் அழைக்கத் தீர்மானித்திருக்கிறோம்” என்று, விழாக் குழுத் தலைவர் திரு. சென்னப்ப ரெட்டியார் அறிவிக்கிறார்.

‘கடுமையான தண்டனையை எதிரி அனுபவிக்க வேண்டியது அவசியம்’

‘கட்சிப் பிரச்சினைகளைக் கொடுமையான செயல்களால் தீர்த்துவிட முடியாது’

‘வில்லன்’ நடிப்பை உண்மையான வாழ்க்கையில் செயல்படுத்தி இருக்கிறார்’ - - - இராதா வழக்கில் நீதிபதி தீர்ப்பு

சென்னை, நவ. 6—

“தற்காப்புக்காகவோ, தவறுதலாகவோ எம். ஜி. ஆர். அவர்களை எம். ஆர். இராதா சுடவில்லை—‘எம். ஜி. இராமச்சந்திரனைத் தீர்த்துக் கட்டிவிட்டு, தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்’ என்ற முடிவுடன்தான் சுட்டிருக்கிறார்; எனவே, அவரை, ‘குற்றவாளி’ என முடிவு செய்கிறேன்.

“இந்தக் குற்றங்களுக்கான தண்டனை பற்றி முடிவு செய்கையில் ‘தண்டனையைக் குறைத்து அளிக்கவேண்டும்’ என்ற எதிர்த்தரப்பு வாதத்தை, இராதாவின் முதிய வயது (57) தவிர, வேறு காரணத்தைக்கொண்டு ஏற்றுக்கொள்ள இயலாது.

“மிக அருகில் இருந்து எம். ஆர். இராதா சுட்டிருந்தும்கூட, எதிர்பாராவகையில் எம். ஜி. ஆர். உயிர் தப்பியிருக்கிறார்; ஆகவே, இது, கடுமையாக தண்டிக்கவேண்டிய ஒரு செயலாகும்.

“எம். ஜி. இராமச்சந்திரனைக் கொன்றுவிட்டு, தானும் ஒரு ‘திராவிடக் கழகத் தியாகி’யாக மடியத் திட்டமிட்டே இந்தக் காரியத்தை எம். ஆர். இராதா செய்திருக்கிறார்.

“எம். ஆர். இராதா, திராவிடர் கழகத்தின் உறுப்பினராக இல்லாவிட்டாலும், கட்சியின் நடவடிக்கைகளில் நம்பிக்கை இழந்து, தனது எதிர்க் கட்சியைச் சேர்ந்தவரைச் சுட்டுக் கொல்லும் ஒரு கொடுமையான முடிவை எடுத்துச் செயல்பட்டிருக்கிறார்.

“சனநாயக அமைப்பில், கட்சிப் பிரச்சினைகளை கொடுமையான செயல்களில் தீர்த்துவிட முடியாது. பல படங்களில் பல ஆண்டுகளாக ‘வில்லன்’ ஆக நடித்திருக்கும் இராதாவின் உடலில், ‘வில்லன்’ தன்மை ஒரு பகுதியாக அமைந்துவிட்டது; அந்த ‘வில்லன்’ நடிப்பை, உண்மையான வாழ்க்கையில் செயல்படுத்தி இருக்கிறார்; அதற்கு அவர் கடுமையான தண்டனையை அனுபவிக்கவேண்டியது அவசியமாகும்”

இவ்வாறு, எம். ஜி. இராமச்சந்திரனை சுட்டுக் கொல்ல முயன்ற குற்றத்திற்காக ஏழாண்டுக் கடுங்காவல் தண்டனையும்; தற்கொலை செய்துகொள்ள முயன்றதற்காக ஆறு மாத வெறுங்காவல் தண்டனையும்; லைசென்சு இல்லாத துப்பாக்கியை வைத்திருந்ததற்காக இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனையும்; துப்பாக்கியைப் போலீசில் ஒப்படைக்காததற்காக இரண்டாண்டுக் கடுங்காவலும்; துப்பாக்கியைச் சட்ட விரோதமாகப் பயன்படுத்தியதற்கு மூன்றாண்டுக் கடுங்காவலும் விதித்துத் தீர்ப்பளிக்கையில், உயர் நீதிமன்ற அடிஷனல் செஷன்சு நீதிபதி கூறினார். எல்லாத் தண்டனைகளையும் ஏககாலத்தில் (அதாவது, மொத்தம் ஏழாண்டுக் கடுங்காவல்) அனுபவிக்கும்படி உத்தரவிட்டார்.

220 பக்கங்கள் கொண்ட தீர்ப்பில், நீதிபதி அவர்கள், ‘எம். ஜி. இராமச்சந்திரன்தான் என்னைச் சுட்டார்’ என்று எம். ஆர். இராதா கூறுவதை நம்ப முடியாது—எனக் கூறியுள்ளார்.

“இராதா மீது ஐந்து குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன; இராதா அந்தக் குற்றங்களைச் செய்வதற்கு மூன்று காரணங்கள் போலீசுத் தரப்பில் கூறப்படுகின்றன; அவைகள் — தொழிலில் பொறுமை; அரசியல் காரணம்; பொருளாதார நெருக்கடி” எனக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி அவர்கள், அதற்கான விளக்கங்களையும் தமது தீர்ப்பில் கூறியுள்ளார்.

வடவர்கள் போல் தமிழர் நடந்து கொள்வதில்லை!

சகிப்புத் தன்மை தமிழர் பண்பு--- கூச்சலிடுவது வடவர் போக்கு!

'ஆங்கில அறிவைப் புறக்கணித்ததன் விளைவு'-- ஏ. இராமசாமி ஆய்வுரை

சென்னை, நவ. 6—

"தமிழக மக்களாகிய நாம், சகிப்புத் தன்மையுடையவர்கள்; 'தமிழில் பேசுங்கள்' என்று, வடவர்களை நாம் கேட்பதில்லை; 'வடநாட்டு மொழி நமக்குத் தெரியாது' என்று தெரிந்திருந்தும்கூட, நாம் பேசும்போது வடநாட்டவர்கள் கூச்சல் போடுவதுபோல நாம் செய்வதும் இல்லை; 'நாமும் மற்றவர்களும் வளமாக இருக்க வேண்டும்' என்றே தமிழக மக்கள் விரும்புகின்றனர்; மற்ற மொழிகளைச் சேர்ந்தவர்களிடம் சகிப்புத்தன்மையற்ற முறையில் தமிழர்கள் நடந்துகொள்வதில்லை"

இவ்வாறு டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) அவர்கள், 'நமது கல்வி முறையில் ஆக்கிலத்தின் இடம்' என்பது பற்றிய மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்த மாநாடு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்தவர்களுக்கும், எனக்கும் வட இந்திய மொழிகளிடமோ, வளமிக்க திராவிட மொழிகளிடமோ விரோதம் ஏதும் கிடையாது.

ஆங்கில மொழியை தொடர்ந்து படிக்க வேண்டியதன் அவசியத்தைப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

எல்லா மட்டங்களிலும் நம்முடைய மாணவர்களுக்குப் போதுமான ஆங்கில அறிவு இருக்க வேண்டும்; இரண்டாவதாக, உயர்நிலைக் கல்வியில் சட்டம், மருத்துவம், எஞ்சினீயரிங், விஞ்ஞானம், மற்றும் தொழில்நுட்பப் பாடங்களை ஆங்கிலத்தில் கற்பதுடன், ஆங்கிலம் மூலம் அவர்கள் தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் நோக்கமாகும்.

"அனைத்து மட்டங்களிலும் ஆங்கிலத்தைப் படிப்பதும் பண்படுத்துவதும், வட்டார மொழிகளின் துரித வளர்ச்சிக்கு நிச்சயம் உதவும்.

கல்வியின் உயர் கட்டத்தில், தத்துவத் துறைகளில்கூட மேலைநாட்டு அறிவுக் களஞ்சியங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதையும், அது இந்நாட்டின் தொன்மைமிக்க தத்துவ வரலாற்றை வளப்படுத்தும் என்பதையும் நினைவிலுறுத்த வேண்டும்.

ஆங்கிலம் இப்போது ஓர் உலக மொழியாகும். உலகின் அனைத்துக் கூடங்களிலும் அது பயன்படுத்தப்படுவதைக் காணலாம்; அதனால்தான், எல்லாக் கட்டங்களிலும் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டுமென வற்புறுத்துகிறோம்.

கடந்த 15 ஆண்டுகளில், ஆங்கில அறிவு பெறுவதை, 'தீண்டத் தகாதது' என்று சிலர் கருதியதன் விளைவாக, உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தில் நம்முடைய மாணவர்கள், போதிய அடிப்படை அறிவைப் பெறத் தவறிவிட்டிருப்பது, பரிதாபத்திற்குரிய ஒன்றாகும். இதன் காரணமாக மாணவர்கள், பி. யு. சி. வகுப்புக்குச் சென்றால், அவர்களால், அந்நியர் சொல்லித் தருவதைப் புரிந்துகொள்ள இயலாத நிலைமை உருவாகிவிட்டது.

'ஆங்கிலம்தான் எல்லா மட்டங்களிலும் பாட மொழியாக இருக்க வேண்டும்' என்பது கருத்தல்ல; சில கட்டங்களில், சில பாடங்களுக்குத் தாய்மொழியே பாட மொழியாக இருக்கலாம்; ஆனால் விஞ்ஞானத்துக்கும், குறிப்பாக உயர் கல்விக்கும் ஆங்கிலமே பாட மொழியாக இருக்கவேண்டும்.

தொழில் கல்விக்கு மட்டுமல்லாமல், தொழில்—வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் ஆங்கிலம் அவசியமாகும்."

வெள்ளிக்கோப்பை பரிசளிக்கப்படும்

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில், தியாகராயநகர் தொகுதியில் எந்த வட்டம் அதிகமான வாக்குகளைச் சேகரித்துத்தருகிறதோ அந்த வட்டத்திற்கு, தோழர் இளமுருகு அவர்களால் அவர்களால் அளிக்கப்படும் வெள்ளிக்கோப்பையை, அறிஞர் அண்ணா தலைமையில்—முரசொலி மாறன் வழங்குவார்.

'அனுமதியின்றி ஏற்க வேண்டாம்'

இரயில்வே அதிகாரிகளுக்கு தமிழக அரசு கோரிக்கை

திருச்சி, நவ. 6—

தமிழகத்தில் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கோ, தமிழகத்திற்கு வெளியிலோ அனுப்பப்படுவதற்காக வரும் வெல்லம், கண்டசாரி சர்க்கரைப் பார்சல்களை, உணவு வழங்குதுறை ஆணையரின் அனுமதியின்றி ஏற்கவேண்டாம் என்று தமிழக அரசு இரயில்வே அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

★

'இன்றையக் கல்வி முறையில் ஆங்கிலத்தின் இடம்'--கருத்தரங்கில் பேரறிஞர்கள் பங்கேற்பு

தாய் மொழிக்குச் சிறப்பிடம் தந்தனர்

'ஆங்கிலம் புறக்கணிக்கப்படாமல் பயன்படுத்தப்பட வேண்டும்' என வற்புறுத்தினர்

சென்னை, நவ. 6—

இந்தியத் துணைக்கண்டத்தின் பல்துறை அறிவாளர்கள்—கல்வி நிபுணர்கள், கடந்த இரண்டு நாட்களாக சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கூடி, 'இன்றையக் கல்வி முறையில் ஆங்கிலத்தின் இடம்' பற்றிக் கருத்தறிவித்தார்கள்.

முதுபெரும் அறிஞர் டாக்டர் ஆற்காடு இராமசாமி அவர்களின் தலைமையில் அமைந்த இந்த மாநாட்டில் பல நல்ல கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சுப்பா ராவ், திருமதி விசயலட்சுமி பண்டிட், பிராங்க் அந்தோணி, பேராசிரியர் இரத்தினசாமி, இருதயநாத் குன்ஸ்ரு, கமலாதேவி சட்டோபாத்யாயா, பி. கோதண்ட ராவ், செட்டிநாட்டரசர் எம்.ஏ. முத்தையா, தொழிலதிபர் கோதாரி, சுதந்தரக் கட்சித் தலைவர் சி. இராசகோபாலாச்சாரியார், டாக்டர் சந்தோஷம், முன்னாள் நிதியமைச்சர் சி.டி. தேஷ்முக், ஆங்கிலோ-இந்தியத் தலைவர் ஏ.இ.டி. பாரோ, தொழிலதிபர் எம்.வி. அருணாசலம், வி.டி. சீனிவாசன், திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம், ஆர்.எம். சேஷாதிரி போன்றோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டதே ஒரு சிறப்பாகும்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட யாரும் தாய் மொழிக்கு உள்ள சிறப்பிடத்தைக் குறைத்துப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்; ஆனால் ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாதென்பதிலும் அவர்கள் மெத்த அக்கறை காட்டினர்.

மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த அதே நேரத்தில், பொறியியல், விஞ்ஞானம், சட்டம், மருத்துவம், வணிகம், கல்லூரி முதல்வர்கள், பள்ளித் தலைவர்கள், பெற்றோர், மாணவர்—இப்படிக் குழுக் குழுவாய்ப் பிரிந்து கலந்து உரையாடித் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். குழுத் தலைவர்கள் அவற்றைத் தொகுத்து மாநாட்டின் முன் அறிவித்தனர்.

முடிவாக மாநாட்டின் தலைவர் டாக்டர் ஆற்காடு இராமசாமி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை அவை முழுமையாக ஏற்றுக்கொண்டது.

தீர்மானம்

"அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களின் அறிக்கைகளை ஆய்ந்து அவற்றை இம்மாநாடு ஏற்றுக்கொள்கிறது.

"உயர்நிலைப் பள்ளி–கல்லூரி நிலைகளில் கல்வியின் தரத்தைக் காத்திடவும், உள்நாட்டிலும், உலக நாடுகளுடனும் தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம் பெரிதும் தேவை; எனவே மாணவர்கள் ஆங்கிலத்தில் முழுத் தேர்ச்சி பெறத்தக்க வகையில் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சட்டமன்றங்களையும், அரசுகளையும், பல்கலைக்கழகங்களையும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

"புதிய உலகத்தின் எல்லாத் துறை அறிவையும் பிராந்திய மொழியில் விளக்கிடவும், வளர்த்திடவும், ஆங்கிலம் பெரிதும் பயன்படுத்தப்பட வேண்டும்."

மேற்கு வங்க அரசியல் நெருக்கடிக்குக் காரணம்!

பதவி விலகிய அமைச்சரின் 'முறையற்ற போக்கின்' விளைவு?

மேற்கத்திய நாடுகளின் தூதர்கள் நிர்ப்பந்தம் காரணமா?--- செய்தி நிறுவனம் தரும் திடுக்கிடும் தகவல்

புதுடில்லி, நவ. 6—

"மேற்கு வங்க உணவு அமைச்சர் பி. சி. கோஷ், கூட்டணி அமைச்சரவையிலிருந்து விலகியதற்கு கல்கத்தாவிலும், புதுடில்லியிலும் உள்ள சில மேற்கத்திய நாடுகளின் பிரதிநிதிகளின் நிர்ப்பந்தமும் ஒரு காரணமாகும்" என்று, யூ.பி.எஸ். செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்டு செல்வாக்கு இல்லாத புதிய அமைச்சரவை அமைப்பதில் மேற்கத்திய தூதர்கள் அக்கறை காட்டுகிறார்கள்.

கூட்டணி அமைச்சரவையைக் கவிழ்த்துவிட்டு, காங்கிரசு ஒத்துழைப்புடன் பாரதீய கிரந்தி தளம் அமைச்சரவை அமைப்பதை ஆதரிப்பதாக, மேற்கத்திய தூதர்கள் உறுதி கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கல்கத்தாவிலுள்ள அமெரிக்க கான்சல்-ஜெனரல் அலுவலகத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி, அண்மையில், பாட்னாவில் நடைபெற்ற பாரதீய கிரந்தி தள மேலிடக் கூட்டத்திற்குச் சென்றிருந்தார்; இவர் எம்.பி. ஒருவரின் சகோதரர்; இந்த எம்.பி., இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலகி, காங்கிரசில் சேர்ந்திருக்கிறார்.

1967 பொதுத்தேர்தலில், தமது மாவட்டமான மிதுனபூரிலிருந்து பி. சி. கோஷ் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முதலமைச்சர் அஜார் குமார் முகர்ஜி ஏற்பாடு செய்தார்; கம்யூனிஸ்டுகள், மற்றும் தமது பிற சகாக்களின் ஆலோசனையையும் உதறித் தள்ளிவிட்டு அவர், கோஷை அமைச்சராக்கினார்!

கடந்த சில மாதங்களாக திரு. கோஷ், டில்லிக்குப் போயிருந்தபோது, மேற்கு வங்க அரசின் விருந்தினர் மாளிகையில் தங்காமல், ஓர் ஐ.சி.எஸ். அதிகாரியின் இல்லத்தில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவது வழக்கம் என்று சொல்லப்படுகிறது.

★

சட்டமன்றக் கூட்டம் கூட்டப்படும்

அமைச்சரவையின் பலம் தெரிந்துவிடும்

கல்கத்தா, நவ. 5—

மேற்கு வங்கக் கூட்டணி அமைச்சரவையின் பலத்தை அறிவதற்காக சட்டமன்றக் கூட்டம் கூட்டப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகுமெனத் தெரிகிறது.

கூட்டணி அமைச்சரவையில் உள்ள கட்சிகளுக்கிடையே இன்று நீண்டநேரம் பேச்சுவார்த்தை நடந்தது; அமைச்சரவையும் இன்று கூடிப் பேசியது.

ஆளுநர் கூறினால் சட்டமன்றத்தை கூட்டுவதை அரசு எதிர்க்காது என்று தெரிகிறது.

ஏழு நாள் அவகாசம் கொடுத்து சட்டமன்றத்தைக் கூட்டமுடியும்.

மத்திய அமைச்சரவையில் மாறுதல்

காமராசரின் செல்வாக்கு மங்கிவிட்டது!

இந்திராவின் கை ஓங்குவதால் ஏற்படும் விளைவு

புதுடில்லி, நவ. 6—

மத்திய அமைச்சரவையில் விரைவில் சில மாறுதல்கள் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜபல்பூரில் காங்கிரசு மாநாட்டுக்குச் சென்றிருந்தபோது, தலைமையமைச்சர், இதுபற்றிக் காங்கிரசுத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

காங்கிரசுக் கட்சியில் காமராசரின் நிலைமை சற்று 'மங்கி' விட்டது! அதுல்யா கோஷிற்கும் செல்வாக்கு குறைகிறது! எஸ். கே. படீல், பட்நாயக் ஆகியோரின் எதிர்காலமும் மங்குகிறது!

இந்நிலையில், ஜி. எல். நந்தாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தலைமையமைச்சர் இநதிரா காந்தியின் கை ஓங்கிவருகிறது!

செய்திப் போக்குவரத்து பாராளுமன்ற விவகாரத் துறையில் துணை அமைச்சராக இருக்கும் குஜ்ரால், திட்ட அமைச்சராகக்கூடும் என்று தெரிகிறது.

'அசாமுக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் தரவேண்டும்' என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துவருகிறது; எனவே அசாம் முன்னாள் நிதி அமைச்சர் ரூபநாத் பிரம்மா, மத்திய அமைச்சரவையில் இடம் பெறக்கூடும் எனத் தெரிகிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த திரு. ஜகன்நாத் பாடியா துணை அமைச்சராகக்கூடும் என்று தெரிகிறது.

வெல்லத்தைத் தேக்கி வைப்பதைத் தடுக்க நடவடிக்கை

ரிசர்வ் பாங்கி உத்தரவு

பம்பாய், நவ. 4—

சென்ற சில திங்களாக வெல்லத்தின் விலை ஒரேயடியாக அதிகரித்திருப்பதால், வெல்லத்திற்கு முன்பணம் கொடுப்பதை கட்டுப்படுத்துமாறு ரிசர்வ் பாங்கி, மற்றவைகளை பாங்கிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பாங்கிகளில் முன்பணம் வாங்கி, பின்னால் அதிக விலைக்கு விற்கும் பொருட்டு வெல்லத்தைத் தேக்கி வைப்பதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டி தெரு, சென்னை-1) [illegible]